மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.03/2022
அ.வ.எண்.27/2022

கே. தனசேகரன் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

1. சந்திரா
2. ராஜேஷ் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 04.08.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.ஜி.உமா மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.பழனிசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர் வாதியின் தம்பி செல்வராஜின் மனைவி மற்றும் 2ம்எதிர்மனுதாரர் அவரது மகன் ஆவார்கள். இம்மனுதாரருக்கு பாகப்பிரிவினை பத்திர எண்.399/2014ன்படி தாவா 2வது அயிட்ட சொத்தில் 1/2 பாகம் உள்ளது. மேற்படி பாகப்பிரிவினைக்கு முன்பு மனுதாரரும், அவரது சகோதரர் செல்வராஜ் என்பவரும் தாவா சொத்தில் தார்சு வீடு கட்டி வாழ்ந்து வந்த நிலையில், மேற்படி செல்வராஜ் என்பவர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது மகனான 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் சுவாதீனத்திற்கும், அனுபவத்திற்கும் இடையூறு செய்து வருகிறார்.

(ii) இம்மனுதாரர் பாகப்பிரிவினை ஆவணத்தின்படி தனக்கு பாத்தியப்பட்ட பங்கில் சுவாதீனத்தில் உள்ள நிலையில், மனுதாரரை தவிர வேறு எவருக்கும் தாவா சொத்தில்

எவ்வித உரிமையும், உரிமைமூலமும், சுவாதீனமும் இருந்ததில்லை. இந்நிலையில் மனுதாரருக்கு தொல்லை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கை தாக்கல் செய்து நடத்திவருகின்றனர். எனவே நீதிமன்ற ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்தை தல ஆய்வு செய்து தாவா சொத்தின் பௌதீக தன்மைகள் குறித்தும், எல்லைகளை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையர் உதவியுடன் அளந்து தாவா சொத்தை அத்து காட்டி வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர்/பிரதிவாதி மனுதாக்கல் செய்துள்ளார்.

<u>2) 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனு மற்றும் மனு பிரமாண பத்திரிக்கையில் நீதிமன்ற ஆணையர் நியமித்து மனுதாரருக்கு சொந்தமான தாவாவிற்கு சம்மந்தமில்லாத தன்னுடைய வீட்டின் வழி மற்றும் பௌதீக தன்மையை பார்வையிடவும், தாவா சொத்தை தகுதி வாய்ந்த சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் வழங்க உத்தரவு கோரியுள்ளதும், நீதிமன்றத்தின் கவனத்தினை திசை திருப்பி மேற்படி தாவாவில் தோய்வு ஏற்படுத்தவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரியுள்ளது அவசியமற்றதும், நீதிமன்றத்தின் காலத்தையும், நேரத்தையும் வீணடிக்கும் செயலாகும். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்குகளில் நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியமில்லை என மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளின் வாயிலாக சுட்டி காட்டியுள்ளது. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :-</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்தை தல ஆய்வு செய்து தாவா சொத்தின் பௌதீக தன்மைகள் குறித்தும், எல்லைகளை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையர் உதவியுடன் அளந்து தாவா சொத்தை அத்து காட்டி வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரியுள்ளது அவசியமற்றதும், நீதிமன்றத்தின் காலத்தையும், நேரத்தையும் வீணடிக்கும் செயல் எனவும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்குகளில் நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியமில்லை என மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளின் வாயிலாக சுட்டி காட்டியுள்ளது எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) இருதரப்பு வாதங்களையும் கவனமாக பரிசீலனை செய்ததில் வழக்கு சொத்தை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அனுபவித்து வருவதை இடையூறு செய்யக்கூடாது என மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்குகளில் நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியமில்லை என்றும், நீதிமன்றத்தின் காலத்தையும், நேரத்தையும் வீணடிக்கும் செயல் என்றும் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது. மனுதாரர் தனக்கும், தன் சகோதரருக்கும் பாகப்பிரிவினை பத்திரத்தின்படி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் இருவரும் தனித்தனியே தார்சு வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், தன் சகோதரரின் மறைவிற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் தனது சுவாதீனத்திற்கும், அனுபவத்திற்கும் இடையூறு செய்வதாகவும், தாவா சொத்தில் மனுதாரரும், அவரது தம்பி செல்வராஜும் தனித்தனியே வீடு கட்டிய பொழுது தாவா சொத்தில் வடக்கு புறத்தில் காலியிடம் விடப்பட்டுள்ளதாகவும், தெற்கு புறத்தில் காலியிடம் எதுவும் விடப்படவில்லை என்று கூறியுள்ளதும் தவறானது என்றும் கூறியுள்ளார்.

(iv) மேற்கண்ட மனு மற்றும் எதிருரையின் சாட்டுரைகளை பரிசீலனை செய்கையில் தரப்பினர்கள் அவர்வர்களுக்கு பத்திரப்படி ஒதுக்கப்பட்ட பாகத்தில் தனித்தனியே தார்சு வீடுகள் அமைத்து அதில் வசித்து வருகின்றனர் என்பது தெரியவருகிறது. எனவே நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில் தாவா சொத்தின் பௌதீக தன்மைகளையும், தாவா சொத்திற்கு செல்லும் வழித்தடம் குறித்து நீதிமன்ற ஆணையரை நியமித்து அவர் தாவா சொத்தை பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்வதற்கான அவசியம் எழவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே சமயத்தில் தாவா சொத்தில் தரப்பினர் அவரவர் ஆவணங்களின் அடிப்படையில் அனுபவத்தில் உள்ளதாலும், தாவா சொத்தின் அளவுகள் மேற்படி ஆவணங்களிலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கும் என்பதாலும், தாவா சொத்தை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக அளப்பதற்கும் இவ்வழக்கில் எவ்வித தேவையும் ஏற்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u> இல்லை

ஒப்பம்/—திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.